**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No.** 124/2018

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிசாமி | கணவர் பெயர் | : ---- |
| தகப்பனார் பெயர் | வையாபுரி | வயது | : 55 |
| கிராமம் | கோனூர் மேற்கு | நாள் | : 29.10.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. என் தந்தை 1ம் வாதிக்கு கடந்த 23.04.1972ம் தேதியில் வழங்கிய D கார்டு பட்டா அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. கடந்த 28.01.1985ம் தேதியில் என் தந்தை 1ம் வாதிக்கு வழங்கிய UDR பட்டா அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. என் தந்தை பெயரில் வழங்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. தாவா சொத்தின் அ–பதிவேடு கணினி பதிவிறக்க நகல் அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. கடந்த 17.06.2015ம் தேதியில் மேட்டூர் தாசில்தாரிடம் எல்லைகளை நிர்ணயிக்க கோரிய மனு மற்றும் சலான் கை நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. கடந்த 16.03.2013ம் தேதியில் RTI விதிப்படி மேட்டூர் தாசில்தார் வழங்கிய தகவல் சார்வு நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. பசிலி 1387 முதல் 1418 வரை செலுத்தப்பட்ட கந்தாய ரசீதுகள் (எண்ணிக்கை 18) அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. ச.எண்.39/16, 39/23 மற்றும் ச.எண்.39/26க்கான என் தந்தை பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.903 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.
தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 26.11.2025 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.